**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 66/2024**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **ஆனந்த்** | **Caste** | : | |
| **Father's Name** | : | கார்த்திக் | **Calling** | : | **மாணவன்** |
| **Village** | : | **திண்டுக்கல்** | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | **28** |
| | | | **Dated** | : | **28.10.2025.** |

**28.10.2025.**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–2 திரு. **ஆனந்த்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

1. நான் திண்டுக்கல் RM காலனியில் குடியிருந்து போட்டி தேர்விற்கு தயார் ஆகி வருகிறேன்.அ.சா1 ஜான் ராஜேஷ் எனது நண்பர் இவ்வழக்கு சம்பவத்தில் இறந்த ஸ்டெல்லா மற்றும் காயம் பட்ட டேவிட் ஆகியோரை தெரியும்.கடந்த 30.07.2023 ம் தேதி காலை சுமார் 9.30 மணிக்கு ஜான்

ராஜேஷ் எனக்கு போன் செய்து அவரது அம்மா ஸ்டெல்லாவிற்கு அடிப்பட்டதாக தகவல் சொன்னார். தகவல் கேள்விப்பட்டு நானும் ஜான் ராஜேஷ் ம் பார்வதி காலேஜ் சென்று பார்த்தோம். சம்பவம் பற்றி விசாரித்த போது ஸ்டெல்லாவும், டேவிட்டும் மதுரைக்கு சென்றுவிட்டு இருசக்கர வாகனத்தில் திண்டுக்கலுக்கு திரும்பி வந்துக்கொண்டிருந்தபோது மதுரையில் இருந்து திண்டுக்கல் நோக்கி வந்த கார் டேவிட் மற்றும் ஸ்டெல்லா வந்த இருசக்கர வாகனம் மீது மோதியதாகவும், அதில் ஸ்டெல்லாவிற்கு பின் தலையில் காயம் பட்டதாகவும், டேவிட்டிற்கு கண், மற்றும் பின்தலையில் காயம்பட்டதாக தெரிந்து கொண்டேன். காயம்பட்டவர்களை தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக ஸ்டெல்லாவை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கும் , டேவிட்டை JCB மருத்துவமனைக்கும் அழைத்து சென்றோம். நாங்கள் ஸ்டெல்லாவை அரசு மருத்துவமனையில் சேர்த்திருந்தபோது அங்கு போலிசார் வந்து விசாரிக்க ஜான் ராஜேஷ் புகார் கொடுத்தார். நான் அதில் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். பின்னர் ஸ்டெல்லாவை மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் அங்கு அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பு வழங்கப்பட்டு குறுக்கு விசாரணை இல்லை.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.10.28 14:07:41 +0530

Judicial Magistrate No.I

Dindigul.